## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1:1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, மானிடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானத்தில் உயர் கல்விக்கான தேசிய நிலையம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி மானிடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானத்தில் உயர் கல்விக்கான தேசிய நிலையத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1:2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1:2:1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 18 இற்கு முரணாக பணிப்பாளர்கள் சபை கூட்ட மண்டபத்தினை அறைகளாகப் பிரித்தல், வலையமைப்பு முகாமைத்துவ அலுவலகத்தினை அறைகளாகப் பிரித்தல், நூலகத்தினைப் புனரமைத்தல் என்பவற்றிற்காகச் செலவுசெய்யப்பட்ட ரூபா 339,931 தொகையினை மூலதனமாக்குவதற்குப் பதிலாக வருமானச் செலவாக வருமானத்திற்குப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

#### 1:2:2. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபம் | |
| I பந்தி 7.4.1 | 2010 ஆம் ஆண்டிற்கான ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் மாத்திரம் நடைபெற்றிருந்ததுடன் அக்கூட்டத்திற்காக அவதானிப்பாளரினை பங்குபற்றச் செய்யுமாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| II பந்தி 5.1.2 | கூட்டிணைந்த திட்டத்தினைத் தயாரிக்கும் போது பின்வரும் அம்சங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>i. நிறுவனத்திற்குச் சொந்தமான வளங்கள்<br>ii. நிறுவனத்தினது ஆற்றல், பலவீனம், சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள் தொடர்பான பகுப்பாய்வு (SWOT Analysis)<br>iii. கடந்த 3 ஆண்டுகளுக்கான செயற்பாட்டு விளைவுகள் தொடர்பான மீளாய்வு<br>iv. இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வது தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்களைத் தெளிவாகக் காட்டும் வகையில் |

தயாரிக்கப்பட்ட
செயல்நடவடிக்கைத் திட்டம்

v. செயலாற்றல் குறிகாட்டிகள்

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2:1 நிதிசார் விளைவுகள்

சுமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிலையத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் ரூபா 435,775 மிகையினை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 212,238 ஆக இருந்தது. இதற்கிணங்க மிகையில் ரூபா 223,537 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

### 2:2. செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புலமைப் பரிசில் வழங்கலின் செயல்முன்னேற்றம்

| ஆண்டு | வழங்கப்பட்ட எண்ணிக்கை (முதலாவது தவணைப் பணம் வழங்கப்பட்டது) | 2010-12-31 ஆந் திகதியில் கற்கை நெறிகளைத் தொடர்கின்ற பட்டப்பின் படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை | 2010-12-31 ஆந் திகதியில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்காத பட்டப் பின் படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை | 2010-12-31 ஆந் திகதியில் கல்வி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்த மாணவர் எண்ணிக்கை | 2010-12-31 ஆந் திகதியில் கல்வி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்த சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 2005 | 60 | 26 | 10 | 24 | 40% |
| 2006 | 59 | 29 | 10 | 20 | 34% |
| 2007 | - | - | - | - | - |
| 2008 | 33 | 27 | 01 | 05 | 15% |
| 2009 | 18 | 18 | - | - | - |
| 2010 | 35 | 35 | - | - | - |
| | 205 | 135 | 21 | 49 | 24% |

புலமைப் பரிசில் பெறுபவரின் கலாநிதிப் பட்டம் 03 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலத்திற்குள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 2005 ஆம் ஆண்டில் புலமைப் பரிசில் பெறுபவர்களில் 26 பேர் கற்கை நெறியினை தாமதமாக ஆரம்பித்ததன் காரணமாக 2010 திசெம்பர் 31 வரையும் கற்கை நெறியினைப் பூர்த்திசெய்து கொள்ள முடியாதிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் உரிய காலப்பகுதிக்குள் கல்வி நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்கு இணங்கியிருந்த போதிலும் அது தொடர்பாக போதியளவில் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2005 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை கல்வி நடவடிக்கைளைப் பூர்த்திசெய்த 49 கலாநிதிகளில் 34 கலாநிதிகளுக்கு மாத்திரம் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டு கற்கை நெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

(இ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதிவரை கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்காததன் காரணமாக புலமைப்பரிசில்கள் வழங்குவதனை இரத்துச் செய்த பட்டப் பின்படிப்பு மாணவர்கள் 21 பேராக இருந்ததுடன் அவர்களிடமிருந்து மீள அறவிட முடியாதிருந்த புலமைப் பரிசிலின் தொகை ரூபா 3,358,823 ஆக இருந்தது.

(ஈ) 2008 – 2012 காலத்திற்கான கூட்டிணைந்த திட்டத்தில் உபாய வழிகளின் கீழ் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த பின்வரும் நடவடிக்கைகள் 2010 ஆம் ஆண்டின் போதும் வினைத்திறனாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

I. ஆகக் குறைந்தது ஒரு ஆண்டிற்கு 4 பட்டப் படிப்பு ஆய்வுக் கட்டுரைகள் அச்சிடுதல்.

II. வெளிநாட்டு பல்கலைக் கழகங்களுடன் ஒன்றிணைந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் தகவல்களை பரிமாற்றம் செய்தலும் வெளி கல்விமாண்களை தேடிக்கொள்ளலும்.

(உ) மின்னியல் நூல் நிலையம்

---------------------------------------------

பட்டப் பின்படிப்பை மேற்கொள்பவர்களின் பாவனைக்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள மின்னியல் நூல் நிலையத்தில் அக்கற்கை நெறிகளுக்குரிய புத்தகங்களும் ஆவணங்களும் போதியளவில் தரவுத் தொகுதியில் உள்ளடக்கப்படாமையினால் அந்த நூல் நிலையத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட சேவைகளை உரிய தரப்பினர்களுக்கு வழங்க முடியாதிருந்தது. நூல் நிலையத்தின் சேவைக்காக நியமிக்கப்பட்டுள்ள நூலகர் மற்றும் இரண்டு நூல் நிலைய உதவியாளர்களுக்காக 2010 ஆம் ஆண்டின் போது சம்பளமாகச் செலுத்தப்பட்ட ரூபா 856,395 மற்றும் அந்த வலைப் பின்னல் இணைப்பு தொடர்பாக வருடாந்தம் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்புச் செலவு ரூபா 487,747 தொகை விளைவற்ற செலவாகக் காணப்பட்டது.

## 2:3. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---------------------------------------------------------------

(அ) நிலையத்தின் நிதிசார் இயலளவினைக் கட்டியெழுப்புவதற்காக வெளிநாட்டு நிதி மற்றும் ஏனைய தொழில்சார் சங்கங்களின் மூலம் பணத்தைச் சேகரிப்பதற்காகத் திட்டங்களைத் தயாரிக்குமாறு 2008 பெப்ரவரி 07 ஆந் திகதிய நிறுவனத்தின் செயல்முன்னேற்ற மீளாய்வுக் குழு அறிக்கையின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் அதற்காக செயற்படு நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டிலிருந்து ஐந்தொகையில் முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 60,000 தொகையான செலுத்தவேண்டிய வெளியிடுதல் செலவுகள் மீளாய்வாண்டின் இறுதிவரையும் தீர்த்துவைப்பதற்கு அல்லது ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 ஆம் ஆண்டிற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,488,000 தொகையான மூலதன மானியத்தில் ரூபா 906,135 தொகையாகிய 61% செலவு செய்யப்படாது சேமிக்கப்பட்டிருந்ததுடன் இப்பணம் ‘‘செலவு செய்யப்படாத மூலதனச் செலவுகள்’’ எனும் பெயருடைய கணக்கில் வைத்திருக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) ஆட்சேர்ப்புக்கள்
(ஆ) புலமைப்பரிசில் வழங்கல்
(இ) வருமானங்களைச் சேகரித்தல்
(ஈ) நூல்நிலைய நிர்வாகம்

ஏச். ஏ. எஸ். ஸமரவீர
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி